ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1412/36 - 2005 සැප්තැම්බර් 30 වැනි සිකුරාදා - 2005.09.30

*1412/36 ஆம் இலக்கம் – 2005 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ 21/78*

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

*21 ஆம் பிரிவின் (I) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 21 ஆம், 139 ஆம் பிரிவுகளுடனும் அரசியலமைப்பின் 44 ஆவது உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடனும் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (I) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, இக்கட்டளை மூலம், 21 ஆம் பிரிவின் கீழ் இலங்கை ருகுணு பல்கலைக்கழகம் தொடர்பில் ஆக்கப்பட்டு, 1984 சனவரி 27 ஆந் திகதிய 281/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையை பின்வருமாறு திருத்துகின்றேன்.*

(1) அத்தகைய கட்டளையின் (iv) ஆம் பந்தியினை நீக்கஞ் செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன் மூலம் :–

"(iv) அத்தகைய பல்கலைக்கழகத்துக்குப் பின்வரும் துறைகளை குறித்தொதுக்குகின்றேன் ;–

1. கமத்தொழில் துறை
2. மானிடவியல் சமூக அறிவியற் துறை
3. மருத்துவத் துறை
4. அறிவியற் துறை
5. கடற்றொழில் அத்துடன் கடல்சார் அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் பற்றிய துறை" ; அத்துடன்

2. அத்தகைய கட்டளையின் I ஆம் நிரையின் (v) ஆம் பந்தியில் காணப்படும் "அறிவியற் துறை" எனும் விடயத்தை உடனடுத்தும் II ஆம் நிரையின் அதற்கு நேரொத்ததாக காணப்படும் பதிவுகளுக்கும் மேலதிகமாகப் பின்வரும் விடயத்தைச் சேர்த்தல் மூலம் :–

| "நிரை I | நிரை II |
|---|---|
| கடற்றொழில் அத்துடன் கடல்சார் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் பற்றியதுறை. | கடற்றொழில் மற்றும் உயிரினங்கள் பற்றிய பகுதி.<br>நன்னீர் வாழ் உயி ரினங்கள் பற்றிய பகுதி.<br><br>சமுத்திர ஆய்வியல் மற்றும் கடல்சார் புவியியல் பற்றிய பகுதி.". |

2005 ஆம் ஆண்டு சனவரி 1 ஆந் திகதி முதல் இக்கட்டளை வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க,
சனாதிபதி.

கொழும்பு,
2005, செத்தெம்பர் 28.

10-270

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.